RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI:10.34256/irjt22246

OPEN ACCESS

# திருமந்திரத்தில் மந்திரப் பயனாய் விளைந்த எண் வகை தொழிலும் சித்தியும்

ர. அரவிந்த் [அ, *], த. தனராசு [அ]

[அ] முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி-635001, இந்தியா.

# Numerical occupation and siddhi resulting from mantra in Thirumantra

**R. Aravinth [a, *], T. Dhanarasu [a]**

[a] Post and Research Department of Tamil, Government Arts College for - Men, Krishnagiri-635001, India

* Corresponding Author: omarivuom.999@gmail.com

Received: 10-02-2022
Revised: 03-04-2022
Accepted: 18-04-2022
Published: 30-04-2022

Check for updates

**ABSTRACT**

The first manifestation of the world view is sound and light. Even if you look at the movement of any object, the elements of sound, sound as light, and light will emerge in them. Similarly, this quality is manifested in all material movements. This is Shiva, Shakti, Vidhu and Natham, which is spread out as two different elements in many levels in many names, as befits the times. Sound is called noise. The sound (mantra) that originated in the cosmic movement in the beginning is called the primordial mantra. Through it the living beings have come into existence and have produced each and every sound in every state. Similarly, the comforting man first used gestures, then immaterial sounds, and then formal sounds to express his actions. He then determined the word for each object and used proper pronunciation. They took on written forms over time. The semantics that appeared in this way occupied a special place for themselves in this universe. These formalized words become habitual and become more powerful when the same word or different word about the same thing is repeated over and over again for important (religious) functions. The magical semantics give good and bad results as appropriate. It is well known that mantra words received and recited by various people through self-knowledge, Lord's instructions and Guru Upadesha have benefits. In this way, Thirumoolar has given us 3000 mantras that lead to the path of life. This review article explains that numerology and numeracy can be obtained by reciting the mantra that Thirumool says here.

**Keywords:** Mantra, Man, Number, Siddhi, Career, Bliss, Mukti, Rebirth

## முன்னுரை

மந்திர மொழியனே போற்றி! மறைமொழி வித்தகனே போற்றி!! மௌனம் கடந்த மரகத மாமணியே போற்றி போற்றி!!! அருளாளர்களால் பயன்படுத்தப்பட்ட சொற்கள் அனைத்துமே மந்திரச் சொல்லேயாகும். நந்தியின் பரிபூரண அருள் பெற்ற திருமூலர் அருளிய நூலுக்குத் திருமந்திரம் எனப்பெயர். வாழ்வில் மனிதன் கடைப்பிடிக்க வேண்டியச் சொல் மந்திரத்தையும், செயல் மந்திரத்தையும், தம்முடைய பாடல்களில் எடுத்தியம்பியுள்ளார். அவற்றைக் கடைப்பிடித்து ஒழுகும் அன்பர்கள் அடையும் எண்வகை தொழில், எண்வகைச் சித்திகளை எடுத்துரைப்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றன.

## மந்திரம் - சொல்லும் பொருளும்

மக்களிடையே பயன்பாட்டில் உள்ள சொற்கள் அனைத்தும் மந்திர நிலைக்கு உகந்த உயர்ந்தச் சொற்களேயாகும். ஆனால் மனிதன் பயன்படுத்தப்படும் எண்ண நிலை, வலிமையைப் பொருத்து அச்சொற்கள் மந்திரச் சொற்களா? இயல்பான சொற்களா? என்பதை முடிவு செய்கிறது.

“மக்களுக்கு மிக்க தனிச் சிறப்பு நல்கும் நல்ல திருப்பெயர் ஒன்று உண்டு அதுவே “மாந்தர்” என்பதாகும்.” (Iramachandran. SB - 2017)

“புறப்பொருளில் “மாந்து” எனில் ‘உட்கொள்ளல்’ என்று பொருள்படும். அகப்பொருளில் ஐம்புலன் வழியாக நுகர்தலுக்கு ‘உட்கொள்ளுதல்’ என்றே கூறுவர். இவற்றின் முறையே நோக்கினால் ஆருயிர் எல்லாம் மாந்தர் என்னும் பெயருக்கு உரியனவாகும். அவ்வாறு இல்லாமல் பொதுப்பெயர் நீக்கி மக்களையே சார்ந்து குறிப்பதால் அதற்கொரு தனிச்சிறப்புப்பெயர் அமையப்பொருள் காணுதல் மிக அவசியமாகும். அது பண்பட்ட மனம், ஆன்மநேய ஒருமைப்பாடு உணர்வினால் நுகரும் திருமறைப் பொருள், மாந்தும் சிறப்புடையனதாகும். அம்முறை மாந்து விப்பாரும், மாந்துவாரும் “மாந்தரென” அழைக்கப்படுவர்.” (Iramachandran. SB - 2017)

அவருள் மாந்துவிப்பான் ‘நிறைமொழி மாந்தர்’ என்பர். அவ்வாறு திகழ்பவர் ‘நிறைமொழி மாந்தரால்’ அருளப்படும் மெய்கண்டார் பண்பட்ட செம்புலன் உணர்வினால் ‘மாந்தி’ அவ்வுணர்வின் பால் என்றும் மாறாது உண்மையில் நிலைத்திருப்பதுவே “மாந்திரம்’ எனப்படும். ‘இரம்’ எனில் உறுதியாக என்றும் மாறா தன்மையற்ற மெய்யுடன் நிலைத்திருத்தல் என்பதாகும். இதனை,

“ஐம்புலனால் மாந்தல் அனைத்துயிர்குமாம் பொழுது

செம்புலனால் மாந்தல் சிறப்பமால் - இம்பரிடை

மக்கட்கே மாந்துணர்வு மாந்திரமே மந்திரமாம்

தக்கப் பொருள் மந்திரத்தாம் சாற்று” (Iramachandran. SB - 2017)

ஆக நிறைமொழி மாந்தர்களால் அருளப்பட்ட புகழ் நூல்கள், பொருள் நூல்கள் அனைத்தும் மந்திரமாகும்.

புகழ் நூல்கள் - தோத்திரங்கள்

பொருள் நூல்கள் - சாத்திரங்கள்

எப்பொழுதும் உள்ளதாக இருக்கும் மந்திரமே மறை என திருமூலர்,

“சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்” (திருமந்திரம் பா.76:1)

“முத்தியை ஞானத்தை முத்தமிழ் ஓசையே” (திருமந்திரம் பா.2115:1)

என்னும் மந்திரப் பாடல் உயர்ந்தோர் வாய்மொழி மந்திரம் என்கிறார். மேலும், அதற்கு நெறிநூல் என்றும், மாந்தர் திருவாணை என்றும் புகழ்ந்து போற்றப்படுகிறது. இதனைத் தொல்காப்பியர்,

பொதுவாக எழுத்துக்கள் பிறக்கும் இடத்தை குறிக்கும் போது,

“உந்தி முதலா முந்துவளி தோன்றி” (Ilampuranar text - 2005)

என எழுத்துக்கள் உந்தியாகிய கொப்பூழில் இருந்து பிறப்பதையும், மேலும், மந்திர சொற்கள் பிறப்பை,

“நிறைமொழி மாந்தர் ஆணையிர் கிளர்ந்த

மறைமொழி தானே மந்திரம் என்ப” (Ilampuranar text - 2005)

என்றும் கூறிப்பிடுகிறார். இதனை திருவள்ளுவர்,

“நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து

மறைமொழி காட்டி விடும்” (திருக்குறள் - 28)

என்னும் குறள் வழி எடுத்துக்காட்டுகிறார்.

## மந்திரம் - சொற்பிரிப்பு

“மனம் + தரம் = மந்திரம் எனவும், மனிதன் + தரம் = மந்திரம் எனவும் பொருள் கூறப்படுகிறது.” (Iramachandran. SB - 2017)

மேலும், மந்திரம் என்ற சொல்,

மந் - மனதால் நினைப்பவரை

திரம் - காப்பது

நினைப்பவரை காப்பது என்று பொருள் கூறுகின்றது.

மேலும், “மந்தரம் என்ற சொல்,

ம் + அ = ம

ந் + - = ந்

த் + அ = த

ர் + அ = ர

\- + ம் = ம்

அ3 + ந் + த் + ர் + ம் = மந்தரம்

1. முதல் அகரம் ஓங்கார பிரணவத்தில் அமரும் மூலப் பிரணவத் தோற்றம்.
2. இரண்டாம் அகரம் தகராகாச மிடத்தில் அமரும் மூலப் பிரணவத் தோற்றம்.
3. மூன்றாம் அகரம் சோதி ஒளிப்பிழம்பில் நிற்கும் மூலப் பிரணவத் தோற்றம்.

ந் = தந்நகரம் - இது நடப்பாற்றலைக் குறிக்கும்

த் = தகரம் - இது வனப்பாற்றலைக் குறிக்கும்

ர் = சோதி ஒளிப் பிழம்பாற்றல் - நடுவணை என்பர் (அம்மையப்பன் நிலை)

ம் = தோன்றியது ஒடுங்க வைக்கும் ஆற்றல் (ஊமை எழுத்து)

மேற்கண்ட சொல்லில் வல்லினம், மெல்லினம், இடையினம் போன்ற அச்சரங்கள் ஊடுருவி நிற்கிறது.” (Iramachandran. SB - 2017)

மேலும், “மந்தரம் ஸ்ரீ மந் + தரம்

மந் = அறிவு, மனோன்மணி, ஓங்காரம், வான், மையம், திருவளர், திருவம்பலம், உச்சிமனம் என பொருள்படும்.

தரம் எனில் தாரம், தரம் என்று குறுகிநின்றது.

தாரம் எனில் - ஆதாரம், ஆதாரம் எனில் நிலைக்களம்.

‘ஆ’ எனில் ஆருயிர் அல்லது ஆன்மா, தாரம் எனில் நிலைப்பிடம் அல்லது ஓங்காரம் ஆகும்.” (Iramachandran. SB - 2017)

'மாந்திரம்' என்பர் 'மந்திரம்' என்று எவ்வாறு குறுகி வந்ததோ அவ்வாறே 'மந்தாரம்' என்பது 'மந்தரம்' என்று குறுகினது. மந்தரம் புருவ நிலைப்பிடம், மந்தரம் எனில் உச்சி மனம் என்று கூறுவர். இதை திருமூலர்,

"மகார நடுவே வளைந்திடுஞ் சக்தியை" (திருமச்திரம் பா.921:1)

"அடையு மகாரத்தில் அந்தமாம் சவ்வும்" (திருமந்திரம் பா.924:3)

"மகார முதல்வன் மனத்தகத் தானே" (திருமந்திரம் பா.976:4)

- ந் (அ) ந - தந்நகரம் - தகராகாசம் - அருவ நிலையைக் குறிக்கும் இடம். இதை திருமூலர்,

"தம்முத லாகுஞ் சதாசிவந் தானே" (திருமந்திரம் பா.983:4)

"தொம் பிட்டு நின்ற அடர்க் கொழுந்தாமே" (திருமந்திரம் பா.932:4)

"கூறும் பொருளி தகார வுகாரங்க" (திருமந்திரம் பா.765:3)

என தகராகாசத்தை விளக்குகிறார்.

மேலும் ராம் - தீயின் வித்தெழுத்து. சுடரின் வித்தெழுத்து சோதியின் வித்தெழுத்து. வன்னியின் பீசம். முத்தி நலம் அளிக்கும் இடமாகும். இதனை,

"கொஞ்சிட்ட வன்னியை கூடுதல் முத்தியே" (திருமந்திரம் பா.1034:4)

என்னும் மந்திரப் பாடலில் மந்திரம் பற்றிய விளக்கத்தையும். மேலும்,

"மந்திர மேறு மதிபானு வைமாற்றி" (திருமந்திரம் பா.972:1)

"ஒழிந்த நுதல் உச்சி உள்ளே தன்னைக்" (திருமந்திரம் பா.455:2)

"வான் பற்றிநின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்" (திருமந்திரம் பா.85:2-3)

என்னும் பாடல்களில் மந்திரத்தின் மேன்மையை விளக்குகிறார்.

மந்திரம் என்பது ஓர் அதிர்வு கருதி, இடையறாது மீண்டும், மீண்டும் சொல்லப்படுவதும், உருவேற்றப்படுவதுமான ஓர் ஒலிக்குறிப்பு.

ஒலிகள் மனிதனைக் கடவுள் வசம் இழுத்துச் செல்லும் வல்லமை, உடையவையே மந்திரங்களாகும். அதனால், மனிதன் பிற தீய வினைகளில் இருந்து தப்பிக்கின்றான்.

### மந்திர வல்லமை (வலிமை) பெற

உலகில் இறைவன் இன்றி ஓர் அணுவும் அசையாது. அவனே அனைத்திற்கும்; மூலம். எனவே இறைவன் அருள் இல்லாமல் மந்திரவல்லமைப் பெறமுடியாது. அவனருள் மாந்தர் உள்ளத்தில் இயங்கினால்தான் மந்திரப் பயிற்சிசெய்து அதன் பயனை பெறமுடியும்.

"அகங்குழைந்து மனமுருகி சித்தத்தினால் உருகி உருகி தொடர்ந்து அருளின் முன் அழுதல் இறைவனின் கருணைக் கடைக்கண் பார்வை குளுமையாகப் படும்போது நிறைமொழி மாந்தருக்கு மந்திரம் புலனாகி மந்திரத்தின் வழிமூலம் அறிவு பூர்வமாய் நிகழ்ந்து செயல்பட்டு வெளிப்படத் துவங்கும்" இதனை, (Iramachandran. SB - 2017)

"சத்தியும் மந்திர சாதகமும் போதகமும்
பத்தியும் நாதன் அருளிற் பயனுமே" (திருமந்திரம் பா.1575:3-4)

"சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்கள்
உத்தம மாகவே ஓதிய வேதத்தின்

ஒத்த உடலையும் உள்நின்ற உற்பத்தி

அத்தன் எனக்கிற் கருளால் அளித்ததே” (திருமந்திரம் பா.84)

என்னும் மந்திரப் பாடல் அவனருள் கிட்டினாலே மந்திரம் சித்தியாகும் என்கிறார். இதனையே மாணிக்கவாசர்,

“அவனருளாலே அவன்தாள் வணங்கி” (திருவாசகம் - சிவபுராணம்.18)

என்னும் பாடல் வரிகளின் மூலம் அறியலாம்.

## மந்திரம் வெளியிடுவோர் தன்மை

“சுத்த பரம்பொருள் என்னும் சதாசிவ தத்துவத்திலிருந்து மனோம்மணி என்னும் திருவருளாற்றலே திருமுறை, இறையருள், நிறையுள்ளம் பெற்றவர். தாம் அவ்வருள் நிலையில் கவனமாக உள்ளபோது, உச்சிமனம் என்று புருவ நடுவன், கண் நிறைமொழி மாந்தர் வாயிலாக மன உன்மனி என்னும் ‘மந்திரம்’ என்னுமிடத்திலிருந்து சுத்த சிவ செயலறிவு மயமாய் வெளிப்படும். இதுவே மந்திரம் வெளிப்படுத்துவோர் தன்மை.” இதனை, (Iramachandran. SB - 2017)

“வாரே சதாசிவ மாறிலா ஆகமம்

வாறே திருக்கூத்து ஆகம வசனங்கள்

வாறே பொதுவாகும் மன்றின் அமலமே” (திருமந்திரம் பா.894:2-4)

“ஏடங்கை நங்கை இறைஎங்கள் முக்கண்ணி

வேடம் படிகம் விரும்பும்வெண் தாமரை

பாடுந் திருமுறை பார்ப்பணி பாதங்கள்

சூடுமின் சென்னிவாய்த் தோத்திரஞ் சொல்லுமே” (திருமந்திரம் பா.1067:1-2)

“பிறங் கொளித்தம்பலம் வாயில் உமிழ்ந்திட்டு

உறங்கலை யாவென் றுபாயஞ் செய்தாளே” (திருமந்திரம் பா.1107:3-4)

“இயைந்தனஞ் ஏந்திழை என்னுள்ள மேவி

நயந்தனன் அங்கே நமசிவ என்னும்

அயன்றனை யோரும் பதமது பற்றும்

பெயர்ந்தனள் மற்றும் பிதற்ற றுதாளே” (திருமந்திரம் பா.1113)

என்னும் மந்திரப் பாடல்களில் மந்திரத்தை வெளிப்படுத்துவோர் பற்றிய தகவல்களை எடுத்துரைக்கிறார் திருமூலர்.

இவ்வாறு வெளிப்படும் மந்திரத்தைச் சொல்லும் அதன் வார்த்தையை வடலூரில் சோதியான இராமலிங்க அடிகளார்,

“நானுறைக்கும் வார்த்தை யெல்லாம்

நாயனக் தன் வார்த்தை” (இராமச்சந்திரன். எஸ்.பி - 2017)

என்று தன்னையும் தன்செயலையும் இறைவனுக்கு ஒப்புக்கொடுக்கிறார்.

மந்திரம் இயங்கும் இடமும் முறையும்

மனிதர்களுள் மந்திரம் அகப்புறமாக இயங்கும் திறத்தை ஐம்பெரும் பூத அமைப்பு முறை பிரிக்கின்றார்கள்.

| | | |
|---|---|---|
| கால் பாகம் | - | நிலம் (மண்) |
| கொப்பூல் | - | நீர் (தண்ணீர்) |
| மார்பகம் | - | தீ (நெருப்பு) |
| கண்டம் | - | வாயு (காற்று) |
| உச்சி | - | வான் (ஆகாயம்) |

இதனை,

"உரமடி மேதினி யுந்தியி லப்பாம்

விரவிய தன்முலை மேவிக்கீழ் ழங்கி

கருமுலை மீமிசை கைக்கீழிற் காலாம்

வரவிய கந்தர மேல் வெளியாமே" (திருமந்திரம் பா.1974)

என்னும் மந்திரப் பாடலில் உடலை ஐம்பூத அமைப்பு முறை அறியமுடிகிறது.

மேலும், மானுட உடலை மெய்ஞ்ஞான அறிவியல் முறையில் முன்று பிரிவுகளாகப் பிரிப்பார்கள். அவை,

| | | |
|---|---|---|
| மண் முதல் நீர் (கால் முதல் கொப்பூல்) | - | அசுரப்பகுதி |
| தீ முதல் காற்று (கொப்பூல் மேல் முதல் கண்டம்) | - | மனித பகுதி |
| வான் (கண்டம் மேல் முதல் உச்சி) | - | தேவ பகுதி |

என்று மூன்று வகையாகப் பிரிக்கின்றார்கள்.

அசுரம் - மனிதம் - தேவம் என்கிற பகுதியை மண், நீர், நெருப்பு, காற்று, வான் ஆகிய ஐந்து பூதங்களால் ஆளப்படுகிறது. அவை ஒவ்வொன்றுக்கும் வித்தெழுத்துகள் (மண் - ல, நீர் - வ, தீ - ர, காற்று - ய, வான் - அ) என்பதாகும். இதன் முறையே ந - ம - சி - வா - ய என்னும் மந்திர எழுத்துக்கள் கூறுவர்.

மண்ணெழுத்தும் நீரெழுத்தும் மானுடத்தை உலக வாழ்க்கையில் இழுப்பட செய்வன. அதுபோலவே தீயெழுத்தும், காற்றெழுத்தும் மனித மனத்தைப் பிடித்து ஒன்றையொன்று போட்டியிடச் செய்து உலக அரங்கில் தடுமாறச் செய்து நிலை குலையச் செய்யும். வான் எழுத்து மேற்கண்ட நிலைகளை அகற்றி இறையருள் உண்மைப் பொருளை உணர்த்தி மனித ஆன்மநேயத்தையும் ஒருமைப் பாட்டையும் வளர்க்கவைக்கும்.

மனித, மனநேயம் - ஆன்ம நேயம் ஆக இரண்டையும் வளர்த்து உண்மைப் பொருளைக் கூட வைக்கும் பகுதியே 'தேவம்' என்னும் சிரசு அல்லது தலை பகுதியாகும்.

தேவம் என்று கூறப்படும் பகுதியில் கண், வாய், நாசி, புருவம், மத்தகம், உச்சி என்னும் ஐந்திடம் இறையருள் என்னும் சிவனருள் விளக்கம் தோன்றும். புருவ நடுமையத்திற்கும் உச்சிக்கும் இடையேயுள்ள நெற்றி நடுவினை மத்தகம் என்பர்.

"இசை ஐந்தும் ஒருசேர முறையே படைப்பாதி ஐந்தொழிலுக்கும் பகரலாம். நெற்றி நடுவாகிய மத்தகத்தில் 'சமனை - உன்மனை' என்னும் திருவருள் நிலைக்களம் உண்டு என்பர். இவையிரண்டும் நடப்பாற்றல் - வனப்பாற்றல்களாக கூறப்படுகின்றன. தாய் நாடியாகிய மையநாடி முதலாக நாதம் முதலாக அனைத்தும் எளிதாக விளங்குவது மட்டுமல்லாமல் சுழிபெருஞ் சேனொளியும் வழிமுன் தோன்றுவதுபோல் உள்ளத்தில் தோன்றும்." (Iramachandran. SB - 2017) அதுவே சிவனருள் நிலை. இதனை திருமூலர்,

"வாய் நாசியோபுரு மத்தகம் உச்சியில்

ஆய் நாசியுச்சி முதலவை யாய்நிற்குந்

தாய் நாடியாதி வாக்காதி சகலாதி

சேய் நாடொளியாகச் சிவகதி யைந்துமே" (திருமந்திரம் பா.2579)

என்னும் மந்திரப் பாடலில் மானுட உடலின் தலைப்பகுதியில் தனிசிறப்பு மிக்கத் தனித்தன்மையான பகுதி உயிர் தலைமையிடமாக உள்ளது. இப்பகுதி உடலில் முதன்மையானது. தனித்தன்மையானது இதனிடத்தில் நாசியின் மேல் பகுதியும், இரு புருவத்திற்கு நடுப்பகுதியும் நெற்றிக்கு நேர்கீழ் பகுதியும் கூடுமிடம் நெற்றியின் நடுமைய்ய இடந்தான் 'முக்கூடல்' என்று பெயர். இந்த முக்கூடலிடத்திற்கு 'மந்தரம்' என்று பெயர். இவ்விடத்தை பல பெயரால் திருமூலர் திருமந்திரத்தில், 442, 590, 600, 619, 622, 641, 662, 641, 662, 952, 1021, 1717, 1901, 1949, 2515, 672 ஆகிய பாடல்களில் விளக்கியுள்ளார். மூன்றாம் கண் பகுதியே மந்திரம் சொல்லுவதற்கான இடமாகும்.

இவ்வாறு நிறையருள் மொழி மாந்தர் கண் மந்திரங்கள் 'மந்தரம்' என்னும் பரவெளியான நெற்றிநடு புருவ மையத்திலிருந்து மெய்ஞ்ஞான ஆன்மநேய அறிவு மயமான இறையருளால் வந்து முனைவுப்பெற்று நிற்கும். "புடைபெயர்ந்து வெளித்தோன்றும், பின் உந்தித்தள்ளும், அடுத்து சலிக்கும், தொடர்ந்து அசைவூரும், பின் எழும்பும், முன்வெளிப்படும் அதன்பின் ஒலிஎழும், எழுந்த ஒலி வரிவடிவம் கொள்ளும், மீண்டும் பிரியும், நீண்டு பெருகும், எல்லா இடத்தும் பரவும். ஆழ்ந்து ஊடுருவும், ஒன்றாகத் தொகுக்கும். அதுவே வகுக்கும், முடிவில் பகுதியாகும். இது மானுடனுக்கு பயன்படும். ஆருயிர் அனுபவத்திற்கு உரியது. புறக்கண்காட்சிக்கு தெரியாமல் நடப்பதாகும். அப்போது எட்டு இரண்டு அறியும் - அடிமுடி தெரியும், கால் எழுத்து இயங்கும்." (Iramachandran. SB - 2017)

தலையெழுத்துக்கூடும், சத்து + சித்து + ஆனந்தம் அனுபவம் கிட்டும். இந்நிலையை திருமூலர்,

"ஆதியோ டந்தம் இலாத பராபரம்

போதம தாகப் புணரும் பராபரை" (திருமந்திரம் பா.381:1-2)

"ஆலிங்க கனஞ்செய் தெழுந்த பரஞ்சுடர்" (திருமந்திரம் பா.378:3)

மேலும், 384, 960, 964, 382, 885, 1756, 891, 943, 393 ஆகிய பாடல்களில் மந்திரம் இயங்கும் முறையை எடுத்துரைக்கிறார்.

எண் தொழில் சித்திக்கு அடிப்படையாய் அமைந்த ஐந்தெழுத்து மந்திரங்கள்

மந்திரங்கள் பல உள்ளன. இருப்பினும் உயிர்க்கு உருதிக் குடிநீராகிய (ஞான அமுதத்தை) தருவது ஐந்தெழுத்து மந்திரமேயாகும்.

| | | |
|---|---|---|
| சி | - | சிவம் |
| வ | - | சக்தி |
| ய | - | ஆன்மா (உயிர்) |
| ந | - | மறைப்பாற்றல் |
| ம | - | மலம், மாயை |

அம்மந்திரமே ஐந்து வகையாக பிரிக்கின்றனர். அவை

| | | | |
|---|---|---|---|
| பரு ஐந்தெழுத்து | - நமசிவாய | - | உலகியல் நல்வாழ்வு |
| நுண் ஐந்தெழுத்து | - சிவாயநம | - | அருளியல் நல்வாழ்வு |
| மீநுண் எழுத்து | - சிவாய | - | மும்மலங்கள் ஒழிந்து சிவனுருவாய் திகழ்வார் |
| காரண எழுத்து | - சிவ | - | சிவனாகவே திகழலாம் |

பெருங்காரண எழுத்து - சி - திருவடிகலப்பு உண்டாகும்

இதனை, (2698 முதல் 2721 வரையிலான பாடல்களில் விளக்குகிறார்.

## மந்திரங்களின் அருளாற்றல்

"மந்திர வழிபாட்டால் - மனம், வாக்கு, வளி சலியாது. சலித்த மனம் ஒன்று சேர்க்கும். சேர்ந்தமனம் குவிக்கொன்றும், குவிந்தமனம் ஒடுங்கும், ஒடுங்கிய மனம் இறுகும், இறுகிய மனம் உறுதியாகும். உறுதியான மனம் அணுவாகும். அணுவான மனம் ஆற்றல் பெருகும். ஆற்றல் பெற்ற மனம் வலிமைக் கொள்ளும், வலிமைப் பெற்ற மனம் அருள்கூடும், அருள்பெற்ற மனம் சிவத்தை நோக்கும், அடுத்து சிவத்தில் பொருந்தும், ஆருயீர் பேருயீர் (சிவம்) மாறுபாடு இன்றி கலக்கும். இதன் சிறப்பால் மற்றோர் உடம்பிற் புகுந்து அவ்வுடம்பின் சார்பால் துன்புறும் சிற்றுயிர்கட்குத் துன்பம் நீக்கி இன்புறும் வழியை அடையும்." (Iramachandran. SB - 2017)

இவ்வாறு நிகழும் நிகழ்வால் திருவருள் துணையும் விருப்பமுடன் வந்து சொல்லிலும் செயலிலும் கைக்கூடும். குண்டலியானது நடுநாடியினை விட்டு நீங்கும். ஐந்தொழில் வல்லமையும், எண்சித்தி, ஆன்மநேய அனுபவம் பெறக்கூடும். இறவா பெருநெறி வந்தடையும் என்று, திருமந்திரப் பாடல் 906, 943, 2045, 1323, 1006, 1322 ஆகிய பாடல்களில் மந்திர அருளாற்றல் நிலையை எடுத்துரைக்கிறார்.

## மந்திர வழிபாட்டால் பெறும் எண்தொழிலும் எண்சித்தியும்

மந்திர வழிப்பாட்டை முதல் நிலையில் "படிப்படியாக வறுமைகள் ஒழியும், செல்வம் நாளுக்கு நாள் சேரும், சிறுமை ஒழியும், பெருமை சேர்க்கும், பகை ஒழியும், நட்பு சேர்க்கும், பொலம் கிட்டும், நலங்கள் கூடும், தீமைகள் அழியும், நன்மைகள் சேர்க்கும், பொல்லோர் விலகுவர், நல்லோர் கூட்டுவிக்கும் பேய்உள்ளம் அகலும், சேய்உள்ளம் பெருகும், உடல்நோய் தீரும், உளநோய் அகலும், ஊறுவிலகும், நற்பேறு நல்கும், இறப்பு தவிரும், பிறவி அகலும், சிற்றின்ப நுகர்வு ஒழியும், பேரின்ப நுகர்வு கிட்டும், மருள் மாயும், அருள்கூடும், கேடு நீங்கும், வீடு வழங்கும், மரணமில்லா பெருவாழ்வின் அருட்பெருஞ் சோதியில் கலந்து காணும் சுகானுபவம் - சித்தானுபவம் - இன்பானுபவம் கைக்கூடும்(Iramachandran. SB - 2017) இதனை திருமூலர்,

"பொன்னான மந்திரம் புகையுண்டு பூரிக்கிற

பொன்னாகும் வல்லோர்க் குடம்பு பொற்பாதமே" (திருமந்திரம் பா.906:3-4)

"பூவுக்குள் மந்திரம் போக்கி நோக்கிடல்

ஆவிக்குள் மந்திரம் அங்குச மாமே" (திருமந்திரம் பா.959:3-4)

"துரந்திடு மந்திரஞ் சூழ்பகை போக

உரந்திரு மந்திரம் ஓமென் றெழுப்பே" (திருமந்திரம் பா.943:3-4)

"கொண்டிடும் உள்ளே குறித்த வினைகள்

வென்றிடு மண்டலம் வெற்றி தருவிக்கும்" (திருமந்திரம் பா.1323:2-3)

"மறிந்திடு மன்னனும் வந்தனை செய்யும்

பொறிந்திடுஞ் சிந்தை புகையில்லை தானே" (திருமந்திரம் பா.1346:3-4)

"எய்திவழிப் படில் எண்சித்தி உண்டாகும்

எய்தி வழிப்படில் எய்திடும் முக்தியே" (திருமந்திரம் பா.1006:3-4)

"நலந்தரு ஞானமும் கல்வியும் எல்லாம்

உரந்தரு வல்வினை யும்மைவிட்டோடச்

சிரந்தரு தீவினை செய்வ தகற்றி

வரந்தரு சோதியை வாய்த் திடுங்காணே" (திருமந்திரம் பா.1322)

போன்ற மந்திரப் பாடல்கள் மந்திரத்தால் அடையும் பயனை அறிவுறுத்துகின்றார். அவ்வாறு நமக்கு கிடைப்பதே,

1. எண் வகை தொழிலும்

2. எண் வகை சித்தியும்

ஆகும்.

## எண் வகைத்தொழில்கள்

மந்திர உச்சாடனத்தின் மூலம் எண்தொழில்கள் கைக்கூடும். எண் தொழிலாற்றலை 'அட்டகருமம்' என்றும் கூறுவர். எண்தொழிலும் தன்வசப்பட்டால் அதனை 'வசியம்' அல்லது 'அனுபவச்சித்து' என்று கூறுவர். ஏனெனில் மந்திரத்தின் முழுப்பயன் அனுபவத்திற்குக் கொண்டு வந்து சித்தியடையும் போது, தன் கைவரப்பெற்று அதனில் திளைத்து மேன்மையுற்று ஆட்சிபுரிவர்.

இத்தொழில்கள் முறையே மெய்ஞ்ஞான அறிவியலில் குறிப்பிடும் உளவியல் அல்லது மனவியல் பயிற்சிமூலம் பெறப்படுகிறது. இதனை, உயிர்ப்பியல் பயிற்சி வழியில் கொண்டு சென்றால் மந்திரங்கள் திண்மைப் பெறும், வன்மை பெருகும், இவற்றை திருமூலர்,

"கூறிய சக்கரத்துள் எழு மந்திரம்

ஆறியல் பாக அமைந்து விரந்திடும்;

தேரிய அஞ்சுடன் சேர்ந்தெழு மாரண

மாறியல் பாகமதித்துக் கொள் வார்க்கே" (திருமந்திரம் பா.1268:1-4)

எனும் மந்திரப் பாடல்கள் எண்வகையான தொழில்களை,

| | | | |
|---|---|---|---|
| 1. | வசியம் | - | கவர்ச்சியாற்றல் |
| 2. | ஆகருடணம் | - | அழைப்பாற்றல் |
| 3. | தம்பனம் | - | தடுப்பாற்றல் |
| 4. | பேதனம் | - | தடுமாற்றும் ஆற்றல் |
| 5. | மோகனம் | - | மயக்காற்றல் |
| 6. | உச்சாடனம் | - | ஏவலாற்றல் |
| 7. | வித்துவேடணம் | - | பிரிவாற்றல் |
| 8. | மாரணம் | - | இறப்பாற்றல் |

என வகைப்படுத்துகிறார்.

1. வசியம் (கவர்ச்சியாற்றல்)

'வசியம்' என்றால் 'கவர்ச்சியாற்றல்' என்று பொருள். 'வசித்துவம்' என்றும் கூறுவர். அன்பினால் இறைவனையும், அவருடைய அருளையும் தன் வயப்படுத்திக்கொள்ளுதல். எல்லா உயிரினங்களையும் தன்பால் வயப்படுத்துதல் வசியமாகும், இதனை,

"ஏய்ந்த அரிதார மேட்டின் மேபூசி

ஏய்ந்த வகார உகாரம் எழுத்திட்டு

வாய்ந்ததோர் வில்வம் பலகை வசியத்துக்

கேய்ந்தவைத் தெண்பதி னாயிரம் வேண்டில்" (திருமந்திரம் பா.984:1-4)

என்னும் மந்திரப் பாடலில் வசியத்தை எடுத்துரைக்கிறார்.

2. ஆகருடணம் (அழைப்பாற்றல்)

'ஆகருடணம்' என்றால் 'அழைப்பாற்றல்' என்று பொருள். இதற்கு தன்பால் இழுத்தல் - அழைத்தல் - ஈர்த்தல் - கவர்தல் என்று பொருள். இதனை, அனுபவ சித்தி மூலம் நினைத்த நபர்களை நம்மை நாடிவரும்படி செய்வது ஆகருடணமாகும். இதனை,

"எண்ஆக் கருடணைக் கேட்டின் யகாரமிட்

டெண்ணாப் பொன்நாளில் எழுவெள்ளி பூசிடா

வெண்ணாவ லின்பல கையிட்டு மேற்குநோக்

கெண்ணாஎழுத்தொடெண்ணாயிரம் வேண்டியே" (திருமந்திரம் பா.985:1-4)

எனும் மந்திரப் பாடலில் ஆகருடணத்தை எடுத்துரைக்கிறார்.

3. தம்பனம் (தடுப்பாற்றல்)

தம்பனத்தை 'தடுப்பாற்றல்' என்பர். பிறர் செய்யும் கெடுதலான இயக்கத்தை இதன் செய்கையால் தடுக்கலாம். ஏவல், வறுமை, மரணம், நோய், ஆபத்து, பகை, விபத்து போன்றவற்றைக் கொடுத்தல் தம்பனமாகும். இதனை,

"நின்ற அரசம் பலகைமேல் நேராக

ஒன்றி மவ்விட்டு ஓலையில் சாதகத்

துன்ற மெழுகைஉள் பூசிக் சுடரிடைத்

தன்றன் வெதுப்பிடத் தம்பனங் காணுமே" (திருமந்திரம் பா.980:1-4)

எனும் மந்திரப் பாடலில் தம்பனத்தை எடுத்துரைக்கிறார்.

4. பேதனம் (தடுமாற்றும் ஆற்றல்)

'பேதனம்' என்பது 'தடுமாற்றும்' ஆற்றல் என்பர். மேலும், 'பேதனம்' என்றால் பேதலிக்கச்செய்தல் என்றும் கொள்வர். பகைவன் நிலையில் பங்கம் ஏற்படுத்துதல், தன்னை தாக்குவதற்கு வருபவரை நிலைகுலையச் செய்தல் பேதனமாகும்.

5. மோகனம் (மயக்காற்றல்)

'மோகனம்' என்றால் 'மயக்காற்றல்' ஆகும். எல்லா உயிரினங்களும் நன்மை மோகிக்கச் செய்தல். பகைப்பட்ட இரு உள்ளங்களை மோகிக்கச்செய்தல் மோகனமாகும். இதனை,

"கரண இறலிப் பலகை யமன்திசை

மரணமிட் டேட்டின் மகார எழுத்திட்டு

அரணமில் ஐங்காயம் பூசி அடுப்பில்

முரணிப் புதைத்திட மோகனம் ஆகுமே" (திருமந்திரம் பா.981:1-4)

எனும் மந்திரப் பாடலில் மோகனத்தை எடுத்துரைக்கிறார்.

6. உச்சாடனம் (ஏவலாற்றல்)

'உச்சாடனம்' எனில் 'ஏவலாற்றல் ஆகும்.' அதாவது செலுத்துதல், அனுப்புதல், ஏவிவிடுதல் என்று பொருள். இதனால் பிறருக்கு நன்மை, தீமை இருவிகையிலும் ஏவுதல் செய்யலாம். இதனை,

"ஆங்கு வடமேற்கில் ஐயனாற் கோட்டதில்

பாங்கு படவே பலாசப் பலகையிற்

காண்கரு மேட்டில் கடுப்பூசி விந்துவிட்டு

டோங்காரம் வைத்திடும் உச்சா டனத்துக்கே" (திருமந்திரம் பா.982:1-4)

எனும் மந்திரப் பாடல் வழி உச்சாடனத்தை எடுத்துரைக்கிறார்.

7. வித்துவேடணம் (பிரிவாற்றல்)

'வித்துவேடணம்' என்றால் 'பிரிவாற்றல்' என்று பொருள். இதனை 'கருடணை' என்றும் கூறுவர். நட்பை முறித்து ஒருவருக்கொருவர் பகைக் கொள்ளச்செய்தல் வித்துவேடனமாகும். இதனை,

"எண்ஆக் கருடணைக் கேட்டின் யகாரமிட்

டெண்ணாப் பொன் நாளில் எழுவெள்ளி பூசிடா

வெண்ணாவ லின்பல கையிட்டு மேற்கேநோக்

கெண்ணா எழுத்தோ டெண்ணாயிரம் வேண்டிலே" (திருமந்திரம் பா.985:1-4)

எனும் மந்திரப் பாடலில் வித்துவேடணத்தை எடுத்துரைக்கிறார்.

8. மாரணம் (இறப்பாற்றல்)

'மாரணம்' என்பதற்கு 'இறப்பாற்றல்' என்பது பொருள் இதனை 'சபித்தல்' என்று கூறுவர். இதன் மூலம் உயிர் கொலை, நோய் விலகச் செய்தல், மும்மலங்கள் நீக்குதல், நஞ்சு நீக்கம் போன்றவற்றைச் செய்யலாம். இதனை,

"உச்சியும் போதில் ஒளிவன்னி மூலையில்

பச்சோலையில் பஞ்ச காயத்தைப் பார்த்து

முச்சது ரத்தில் முதுகாட்டில் வைத்திடு

வைச்சபின் மேலுமோர் மாரணம் வேண்டிலே" (திருமந்திரம் பா.983:1-4)

எனும் மந்திரப் பாடலில் மாரணத்தை எடுத்துரைக்கிறார்.

இவற்றை, புலிப்பாணி சித்தர் தம்முடைய சிதம்பர சக்கரத்தில்,

"பாடினேன் 'யநமசிவ' வசியமாகும்

பண்பான 'மசிவயந' மோகனமமே சித்தி

ஆடியே 'வசிமநய' அழைப்புமாகும்

அப்பனே 'நமசிவய' தம்பனமே செய்யும்

கூடியே 'வயநமசி' யுச்சாடந்தான்

குணமான 'யவசிமந' பேதனந்தானே

தேடியே 'நயவசிம' வித்து வேடனம்

'சிவயநம' மாரணமாய் செப்பலாமே" (Iramachandran. SB - 2017)

எனும் பாடலிலும்,

"பாடியே மோகனதம் பவைசியம்

பண்பான அழிப்பு முதலிவை நாலுக்கும்

சாடியே மாரண பேதன வித்வேடம்

சார்ந்திரு முச்சாடனங்களிவை நாலுக்கும்" (Iramachandran. SB - 2017)

எனும் பாடல் வழி எண்தொழில்களையும், அவற்றை பெறும் வழியையும் எடுத்துரைக்கிறார்.

## எண் வகைச்சித்திகள்

மந்திரத்தின் மூலமாக எண் தொழிலாற்றல் பெற்ற அன்பர்கள் அதனோடு நிற்காமல் வாசிப் பயிற்சி மற்றும் யோகத்தின் முதிர்வால் அல்லது தீவிர இறையருள் அகவழிபாடு மூலம் (தியானம்) உயிர் பக்குவம் அடைந்து வரும் போது உயிர்ப்பு (பிராணன்) விடுவது குறைந்துக் கொண்டே வரும். அத்துடன் தூக்கம் குறையும். இறையருளால் உயிர்ப்பு ஓர் புள்ளியில் குவிந்து வட்டம் கொள்ளும், உறக்கம் நின்றுவிடும். உடலின் இருள் தேகம் - மருள்தேகம் அகன்று சுத்ததேகமாக மாறி மந்திர தேகமாக மாறிவிடும் (பிரணவ தேகம்) அப்பொழுது மேல்நிலை விந்து செயல்படத் துவங்கும். இந்த சமயத்தில் அதற்குரிய மந்திரங்களைப் பயன்படுத்தும் போது எண் வகைச்சித்திகளாக அனுபவத்திற்கு வரும்.

இந்நிலை அடைவதை பதினெட்டு ஆண்டு கால ஆன்மநேய அகமுக இறையருள் வழிபாடு பயிற்சி மூலம் பெறலாம் என்கின்றதன சித்தர் நூல்கள். இவற்றை திருமூலர்,

"பணிந்துதெண் திசையும் பரமனை நாடித்

துணிந்தெண் திசையும் தொழுதுஎம் பிரானை

அணிந்தெண் திசையிலும் அட்டமா சித்தி

தணிந்தெண் திசைசென்று தாபித்த வாறே" (திருமந்திரம் பா.625:1-4)

"சமாதிசெய் வார்க்குத் தரும்பல யோகம்

சமாதிகள் வேண்டா இறையுட னேகிற்

சமாதிதா னில்லை தானவ னாகிற்

சமாதியில் எட்டெட்டுச் சித்தியும் எய்துமே" (திருமந்திரம் பா.616:1-4)

"தானே அணுவும் சகத்துத்தன் நோன்மையும்

மானாக் கனமும் பரகாயத் தேகலும்

தானாவ தும்பர காயஞ்சேர் தன்மையும்

ஆனாத வுண்மையும் வியாபியு மாம்எட்டே" (திருமந்திரம் பா.634:1-4)

எனும் பாடல்களில் அட்டமா சித்திகள் (எண் சித்திகள்) எடுத்துரைக்கிறார்.

| | | |
|---|---|---|
| 'அணிமா | - அணு | - நுண்மை தன்மை பெறுதல் |
| மகிமா | - பருமை | - பருமை தன்மை பெறுதல் |
| இலகிமா | - ககனம் | - மென்மை (எளிமை) தன்மை பெறுதல் |
| கரிமா | - நோன்மை | - வன்மை (கடினம்) தன்மை பெறுதல் |
| பிராப்தி | - பரகாய தேகம் | - விரும்பியதை எய்தும் தன்மை பெறுதல் |
| பிராகாமியம் | - தானாவது | - நிறைவுண்மை அடைதல் |

ஈசத்துவம் - இறைத்தன்மை - அதிகார தன்மை பெறுதல்

வசித்துவம் - வியாப்பியம் - கவர்ச்சி தன்மை பெறுதல்'

என எட்டு விதமான சித்திகள் பெறப்படுகின்றன.

1. அணிமா

'அணிமா' என்பது 'நுண்மை' சித்தியாகும். அணுவைவிட மிக நுண்மையாக வடிவம் கொள்ளுதலாகும். இதை,

"மந்திரம் ஏறு மதிபானு வைமாற்றிக்

கந்தாய்க் குழியிற் கசடற வல்லார்க்குத்

தந்தின்று நற்கா மியலோகஞ் சார்வாகும்

அந்த உலகம் அணிமாதி ஆமே" (திருமந்திரம் பா.656:1-4)

"அணிந்த அணிமாகை தானாம் இவனும்" (திருமந்திரம் பா.657:2)

எனும் மந்திரப் பாடல்களில் அணிமா சித்தியை எடுத்துரைக்கிறார்.

2. மகிமா

'மகிமா' என்பது 'கொண்டல்' அல்லது பெருமலைபோல் பலமடங்கு பெருகி பருத்த வடிவமெய்துதல். இதனை,

"மைப்பொரு ளாகும் மகிமாவ தாகுமே" (திருமந்திரம் பா.660:4)

எனும் மந்திரப் பாடலில் மகிமா சித்தியை எடுத்துரைக்கிறார்.

3. இலகிமா

'இலகிமா' இளகிய பொருள்களிலும் முழுகாமல் காற்றின் விசையிலும் துல்லிய வடிவம் எய்துதல். இதனை,

"சாகின்ற காலங்கள் தன்வழி நின்றிடின்

மாய்கின்ற தையாண்டின் மாலகு வாகுமே" (திருமந்திரம் பா.658:4)

எனும் மந்திரப் பாடலில் இலகிமா சித்தியை எடுத்துரைக்கிறார்.

4. கரிமா

'கரிமா' என்பது அசைக்கமுடியாத கனமான உடல் பெறுதல். இதனை, 680 - ஆம் மந்திரப் பாடலில் எடுத்துரைக்கிறார்.

5. பிராப்தி (பரகாயம்)

'பிராப்தி' என்பது உள்ளத்தால் விரும்பிய பொருளின் வடிவம் பெறுதல், இதனை,

"விரிந்த பரகாயம் மேவலும் ஆமே" (திருமந்திரம் பா.666:4)

எனும் மந்திரப் பாடலில் பிராப்தி சித்தியை எடுத்துரைக்கிறார்.

6. பிராகாமயம்

'பிராகாமியம்' என்பது எண்ணிய அளவில் கணக்கிலா இடங்களில் காட்சி அளித்தல். இதனை, 683 - ஆம் மந்திரப் பாடலில் எடுத்துரைக்கிறார்.

7. ஈசத்துவம்

'ஈசத்துவம்' என்பது அயன் முதலியோர் மீது தன் அதிகார ஆட்சியைச் செலுத்தி அவர்களால் வணங்கப்படுதல். இதனை,

"பண்டையஅவ் வீசன் பரத்துவ மாகுமே" (திருமந்திரம் பா.668:4)

எனும் மந்திரப் பாடலில் ஈசத்துவத்தை எடுத்துரைக்கிறார்.

8. வசித்துவம்

'வசித்துவம்' என்பது உலகம் முழுவதும் தன் வயமாக்குதலாகும்,

"நற்பொரு ளாகிய நல்லதன்மைய னாகுமே" (திருமந்திரம் பா.672:2)

எனும் மந்திரப் பாடலில் வசித்துவத்தை எடுத்துரைக்கிறார்.

மேற்கண்ட எட்டு சித்திகளில் அணிமா, மகிமா, இலகிமா, கரிமா ஆகியவை நான்கு சித்திகளும் உடலால் நிகழக்கூடிய சித்தியாகும்.

பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் ஆகிய நான்கு சித்திகளும் மனத்தால் நிகழக்கூடிய சித்தியாகும்.

இவ்வாறாக மணி, மருந்து, மந்திர முறையில் மந்திரம் மனநிலை மாற்றத்திற்கும், மருந்து உடல் நிலை மாற்றத்திற்கும், மணி உயிர் நிலை மாற்றத்திற்கும் பெரும் பங்கு வகிப்பதாக அமைகின்றது.

எனவே, ஆறறிவு பெற்று உயிர், மேலான அறிவாகிய சிவகதி அடைவதற்கு மந்திரம், மருந்து, மணி நிலைகள் அடிப்படை நிலையாக ஆதார யோகக்கூறாக இருப்பதைக் காணமுடிகிறது. இந்நிலையே சீவன் சிவனாவதற்கான முதல் நிலையாகும்.

## முடிவுரை

திருமூலர் அருளிய திருமந்திரம் முழுமையும் மந்திரம் என்றே போற்றப்படுகின்றது. வாழ்வை மாற்றும் ஒழுக்க மந்திரம், மனதை மாற்றும் ஒலி மந்திரம், ஆன்மாவை பிரகாசிக்கும் ஒளி மந்திரம் என மந்திரங்களை பல விதமாக எடுத்துரைக்கிறார். மனித மனத்தை மாற்றும் திறங்கொண்ட எழுத்துரு, எண்வுறு மந்திரமாகும். மாந்தரிடத்து இருந்து பிறந்தது மந்திரம். மந்திரம் ஓகம் (யோகம்) பயில்கின்றவர்கள் இடகலை, பிங்கலை தவிர்த்து சுழுமுனையில் (உயிர் நாடி, புருவ நடு) உச்சரித்தால் முழுபயன் கிட்டும். மந்திரங்கள் ஓங்காரமாகிய பிரிப்பே அ, உ, ம, விந்து, நாதம் என்றும் அவையே நமசிவாய (அ) சிவாயநம என்னும் ஐந்தெழுத்துமாகும். இவற்றை குருவருள் கூட்டவும் பக்குவத்திற்கேற்ப உச்சாடனம் செய்ய மனதில் உள்ள தீய குணங்கள் நீங்கி தூய எண்ணமும் அதை கடந்த எண்ணமற்ற வெற்றுமனமும் ஏற்படும். நல்லெண்ணம் ஏற்படுகின்ற நிலையில் மனதூய்மையின் விளைவாக வேண்டிய அனைத்தும் இப்பிரபஞ்சத்தில் கிடைக்கும். அவற்றுள் எண்தொழில்கள் உலகில் வாழ்வில் இருக்கும்போதும், எண்சித்திகள் சமாதியில் கூடி நிற்கும் போதும் கிட்டும். ஆனால், இச்சித்திகளில் பொருந்தாமல் மேற்கொள்ளும் மேலான தவமே பிறவாமைக்கு வழிவகுக்கும். இந்நிலையே பிறவா பெருநெறியாகிய முக்தியாகும்.

## References


Gopphai Shivam, 2010, Saiva Temples and the Human Body as Dramatic Allegories, Goodbooks Publication, Chennai.

Ilampuranar, 2005, Tholkappiyam Bhattatikharam, Saradha Publishing House, Chennai

Jagadratsakan.S, 2016, Thiruvasakam, Alwar Research Centre, Chennai

Manikkavasakan. Sun, 2016, Thirumoolar Thirumandram, Uma Publishing House, Chennai

Murugesan. CS, 2015, Shivamantram, Shankar Publishing House, Chennai - 600 049.

Parimelazakar Text, 2018, Sarada Publishing House, Chennai

Ramachandran. S.B., 2017, Mantra Worship for God's Grace, Tamarai Publishing House, Chennai

Sami Chidambaranar, 2010, Science as Seen by the Siddhas - Philosophy, Uma Publishing House, Chennai

Vithuvan Balur Kannappa Mudaliar, 2009, Tamil Mantram, Ravi Publishing House, Perambalur

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

ext of this article is open access and licensed
ttribution 4.0 International License